**மாதிரிவினாத்தாள் - 2024 - 25**

**SAMPLE QUESTION PAPER -2024 -25**

| | |
|---|---|
| **வகுப்பு: பன்னிரண்டு** | **மொத்த மதிப்பெண்கள்:80** |
| **(XII-STD)** | **Maximum Marks: 80** |
| **தமிழ்** | **காலஅளவு : 3 மணி** |
| **TAMIL : 106** | **Time Allowed : 3 Hours** |

---

- **இந்த வினாத்தாளில் அச்சிடப்பட்ட 11 பக்கங்கள் உள்ளதைச்**
- **சரி பார்க்கவும்**
- **இந்த வினாத்தாளில் 15 வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்**
- **எழுதத் தொடங்குவதற்கு முன் வினாவரிசை எண்ணைக் குறிப்பிடவும்**
- **Please check that this question paper contains 11 printed pages**
- **Please check that this question paper contains 15 part of the questions**
- **Please write down the serial number of the question beforeattempting it.**

---

## பகுதி அ (படித்தல் -10 மதிப்பெண்)

## Section –A Unseen passage (10 Marks)

1. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு விடைதருக.** **5x1=5**

ஒட்டகச்சிவிங்கி தன் நீண்ட கழுத்தை உயர்த்தி நடந்து வருவதைப் பார்க்கவே அழகாக இருக்கும். கேரி ரிச்மாண்ட் என்ற ஆராய்ச்சியாளருக்கு ஒட்டகச்சிவிங்கிகள் மேல் மிகுந்த பிரியம். இவர் கண்டுபிடித்த பல உண்மைகள் நம்மிடமும் இந்த மிருகத்தின் மீது பாசத்தை ஏற்படுத்துகின்றது. ஒட்டகச்சிவிங்கி பிறக்கும்போது தன் தாயின் கருப்பையிலிருந்து, பத்தடி உயரத்திலிருந்து தரையில் 'பொத்'தென்று விழும். குழந்தை பிறந்தவுடன் தாய் என்ன செய்வாள்? தன் பிஞ்சுக் குழந்தையை அன்போடு தடவித் தருவாள். மனிதர்கள் மட்டுமல்ல, நாய்கூடத் தம் குட்டிகளைப் பாசத்தோடு நாவால் வருடும். ஆனால், ஒட்டகச்சிவிங்கி அப்படியல்ல! தாயின் பாதுகாப்பான கருப்பையிலிருந்து மண்ணைத் தொட்ட குட்டி, தன் கால்களை உடலுக்குள் பாதுகாப்பாக மடக்கிக் கொள்ளும், அதன் கண்கள் மெல்லத் திறக்கும். தாய் குனிந்து தன் குட்டியை ஒரு கணம் பார்க்கும், உடனே தன் கால்களைக் குட்டியின் அருகே கொண்டு போய் தன் முழுபலத் தோடும் குட்டியை ஓங்கி உதைக்கும்! இந்தத் தாக்குதலால், பல அடிகள் தாண்டிப் போய் குட்டி விழும்.

வலியைச் சமாளித்து மெல்ல எழுந்திருக்க முயற்சிக்கும். தாய் மீண்டும் உதைத்துக் குட்டியைக் கீழே தள்ளும். உதைத்தல், கீழே விழுதல், எழுதல் என இந்தப் படலம் பலமுறை தொடரும். விழுந்த மறுவிநாடியே எழுந்து நிற்கக் குட்டி எப்போது கற்றுக் கொள்கிறதோ, அதுவரை, இந்த 'உதைப்பாடம்' தொடரும்.

ஒட்டகச்சிவிங்கி 18அடி உயரமும் ஆயிரம் கிலோ எடையுமாக உள்ளதே தவிர, மிகச் சாதுவான பிராணி. மற்ற மிருகங்களோடும் சண்டையிட அதற்குத் தெரியாது. சிங்கம், புலி, ஓநாய் ஆகியவற்றிற்கு ஒட்டகச்சிவிங்கி மிகப் பிடித்தமான உணவு. எனவே, ஒட்டகச்சிவிங்கி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், அதற்கு வேகமாக ஓடத் தெரிந்திருக்க வேண்டும். ஓடும்போது, தவறி விழுந்துவிட்டால், கண்சிமிட்டும் நேரத்தில் எழுந்து மறுபடியும் வேகமாக ஓடத் தெரிய வேண்டும். தாய் தன் பச்சைக் குட்டியை உதைப்பது இந்தப் பயிற்சிக்காகத்தான். தன் குட்டியின் எதிர்காலம் பாதுகாப்பானதாக இருக்க வேண்டுமே, எதிரிகளிடமிருந்து குட்டி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமே என்ற ஒரே எண்ணம்தான் அதற்கு. ஒட்டகச்சிவிங்கியின் இந்த நடவடிக்கையில், மனிதர்களுக்கு ஒரு வாழ்க்கைத் தத்துவம், அழகான பாடம் அடங்கியிருக்கிறது.

**வினாக்கள்** :

I. ஒட்டகச்சிவிங்கி பற்றிய ஆய்வை மேற்கொண்டவர் யார்?

A. மேரிகோம் B. சிக்மெண்ட் C. கேரி ரிச்மாண்ட் D. டொனாண்டோ

II ஒட்டகச்சிவிங்கி எத்தனை அடி உயரம் கொண்டது?

A. 15 B. 10 C. 18 D. 16

III. இந்த 'உதைப்பாடம்' தொடரும் எதுவரைத் தொடரும் ?

A. விழுந்த மறுவிநாடியே எழுந்து நிற்கக் கற்றுக்கொள்ளும் வரை

B. தூங்கும் வரை C.இறக்கும் வரை

D விழுந்த மறுவிநாடியே எழுந்து நிற்க முடியாத வரை

IV. சிங்கம், புலி, ஓநாய் ஆகியவற்றிற்கு மிகப் பிடித்தமான உணவு ________.

A. மான் B ஒட்டகச்சிவிங்கி C. முயல் D. யானை

V. ஒட்டகச்சிவிங்கியின் எடை அளவு ________________ .

A.10000 B. 10 C. 100 D. 1000

2. **<u>பின்வரும் உரைநடைப்பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை தருக</u>.** **5x1=5**

புதிய தேசங்களைக் கண்டறிவதிலும், உலகின் ஆழங்களை அலசுவதிலும் ஐரோப்பியர்கள் முன்னோடிகளாக இருந்திருக்கின்றனர் என்பது வரலாறு கூறும் உண்மை. **1498**-ஆம் ஆண்டு இந்தியாவில் கால் பதித்த ஐரோப்பாவின் கனவை நனவாக்கினார் ஒரு போர்ச்சுகீசிய நாடுகாண் ஆர்வலர். அவர்தான் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்குக் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்து வரலாற்றில் தடம் பதித்த வாஸ்கோடகாமா.

இந்தியாவிற்கு கடல்மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று முயன்றவர்களில் அவருடைய தந்தையும் ஒருவர். ஆனால் அந்தக் கனவு நிறைவேராமலேயே அவர் இறந்துபோனார். அவரது மறைவிற்குப் பிறகு போர்ச்சுகீசிய மன்னர் இரண்டாம் ஜான் அந்தப் பணியை முடித்துத் தருமாறு வாஸ்கோடகாமாவைக் கேட்டுக்கொண்டார். 1497ல் போர்ச்சுக்கல் தலைநகர் லிஸ்பனில் இருந்து நான்கு கப்பல்களில் புறப்பட்டனர். அந்த நான்கு கப்பல்களில் மொத்தம் 170 பேர் இந்தியாவை நோக்கி புறப்பட்டனர். பல துறைமுகங்களில் தரையிறங்கிய பின் ஒரு குஜராத்திய மாலுமியைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தார் வாஸ்கோட காமா. 23 நாட்கள் கவனமாகக் கப்பலைச் செலுத்திக் கேரளப் பகுதியின் கள்ளிகோட்டைக்கு (கோழிக்கோடு) வந்து சேர்ந்தார் வாஸ்கோடகாமா. பின் கிட்டதட்ட ஓராண்டு பயணத்திற்குப் பின் இரண்டு கப்பல்கள் மட்டும் பத்திரமாகப் போர்ச்சுக்கல் வந்தடைந்தன. இவ்வாறு அரும்பாடு பட்டு மூன்றாவது முறையாக இந்தியாவிற்குக் கடல் மார்க்கத்தைக் கண்டறிந்தார் வாஸ்கோட காமா.

**<u>வினாக்கள்</u>:**

I. தம் கனவு நிறைவேறாமல் இறந்தவர் யார்?
II. போர்ச்சுகலின் தலைநகர் எது?
III. கள்ளிக்கோட்டையின் இக்காலப் பெயர் என்ன?
IV. புதிய தேசங்களைக் கண்டறிவதில் முன்னோடிகள் யாவர்?
V. எத்தனை கப்பல்கள் மீண்டும் போர்ச்சுக்கல்லை வந்து அடைந்தன?

## பகுதி -ஆ(இலக்கணம் -12 மதிப்பெண்)
## Section – B ( Grammar-12 Marks)

3. **பிழை நீக்கித் திருத்தப்பட்ட தொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக** [ மூன்று மட்டும் ] 3x1=3

I. **பலர் உரக்கம் வரவிள்ளை என்று நூள்களைப் படிப்பார்கள்.**

A. பலர் உறக்கம் வறவில்லையே என்று நூல்களைப் படிப்பார்கள்.
B. பலர் உறக்கம் வரவில்லையே என்று நூல்களைப் படிப்பார்கள்.
C. பளர் உறக்கம் வரவில்லையே என்று நூல்களைப் படிப்பார்கள்.
D. பலர் உறக்கம் வரவில்லையே என்று கூறி படிப்பார்கல்.

II. **பன்டைக்காலத்தில் கல்வியரிவு பெற்றோரின் என்னிக்கை குறைவாகவே இருந்தது.**

A. பண்டைக் காலத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.
B. பண்டைக் காலத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை குரைவாகவே இருந்தது.
C. பண்டைக் காலத்தில் கல்வியறிவு பெற்றோரின் என்னிக்கை குறைவாகவே இருந்தது.
D. பன்டைக்காலத்தில் கல்வியறிவு பெற்றோரின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

III. **உடம்பு வலிக்கு வெண்ணீர் ஒற்றடம் கொடுத்தார்கல்.**

A. உடம்பு வளிக்கு வெந்நீர் ஒற்றடம் கொடுத்தார்கள்.
B. உடம்பு வலிக்கு வெண்ணீர் ஒற்றடம் கொடுத்தார்கள்.
C. உடம்பு வளிக்கு வெந்நீர் ஒற்ரடம் கொடுத்தார்கள்.
D. உடம்பு வலிக்கு வெந்நீர் ஒற்றடம் கொடுத்தார்கள்.

IV. **அண்னனும் அக்காலும் தம்பியை அன்புடன் வரவேற்றனர்.**

A. அண்ணனும் அக்காளும் தம்பியை அன்புடன் வரவேற்றனர்.
B. அண்ணனும் அக்காலும் தம்பியை அன்புடன் வரவேற்றனர்.
C. அண்ணனும் அக்காலும் தம்பியை அண்புடன் வரவேற்றனர்.
D. அன்னனும் அக்காளும் தம்பியை அன்புடன் வரவேற்றனர்.

V. **விரகு விற்கிற விளையைப் பார்த்தாயா?**

A. விரகு விற்கிற விலையைப் பார்த்தாயா?
B. விறகு விர்கிற விலையைப் பார்த்தாயா?
C. விறகு விற்கிற விலையைப் பார்த்தாயா?
D. விறகு விற்கிற விளையைப் பார்த்தாயா?

**4. வல்லினமெய்யிட்டுத் திருத்தியதொடர் எதுவெனக் கண்டறிந்து எழுதுக [ மூன்று மட்டும் ]** **3x1=3**

I. **இரண்டிரண்டு பூக்களை வைத்து தொகுக்கப்படும் மாலைக்கு கண்ணி என்று பெயர்.**

A. இரண்டிரண்டு பூக்களை வைத்து தொகுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்றுப் பெயர்.
B. இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொகுக்கப்படும் மாலைக்கு கண்ணி என்று பெயர்.
C. இரண்டிரண்டுப் பூக்களை வைத்துத் தொகுக்கப்படும் மாலைக்கு கண்ணி என்று பெயர்.
D. இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொகுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.

II. **'தாயை பழித்தாலும் தண்ணீரை பழிக்காதே' என்பது தமிழக மக்களின் சொல் வழக்காகும்.**

A. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரை பழிக்காதே' என்பது தமிழக மக்களின் சொல் வழக்காகும்.
B. 'தாயை பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்பது தமிழக மக்களின் சொல் வழக்காகும்.
C. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்பது தமிழக மக்களின் சொல் வழக்காகும்.
D. 'தாயை பழித்தாலும் தண்ணீரை பழிக்காதே' என்பதுத் தமிழக மக்களின் சொல் வழக்காகும்.

**III. தெய்வ சிலைகளை குளிர்க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.**

A. தெய்வச்சிலைகளை குளிர்க்க வைப்பதைத் திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.

B. தெய்வ சிலைகளைக் குளிர்க்க வைப்பதை திருமஞ்சனம்ச் ஆடல் என்று கூறுவர்.

C. தெய்வச் சிலைகளைக் குளிர்க்க வைப்பதைத் திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.

D. தெய்வ சிலைகளைக் குளிர்க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்றுக் கூறுவர்.

**IV. மதியழகன் தீகாயம் ஏற்பட்ட இடத்தை உடனடியாக தண்ணீரை கொண்டு குளிர வைத்தான்.**

A. மதியழகன்த் தீகாயம் ஏற்பட்ட இடத்தை உடனடியாக தண்ணீரை கொண்டுக் குளிர வைத்தான்.

B. மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தை உடனடியாகத் தண்ணீரைக் கொண்டு குளிர வைத்தான்.

C. மதியழகன் தீகாயம் ஏற்பட்ட இடத்தை உடனடியாக தண்ணீரைக் கொண்டு குளிரத் வைத்தான்.

D. மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தை உடனடியாகத் தண்ணீரை கொண்டு குளிர வைத்தான்.

**V. மாடுகளை போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழா மாட்டு பொங்கல்.**

A. மாடுகளைப் போற்றி மகிழ்விக்கக் ஏற்படுத்திய விழா மாட்டு பொங்கல் .

B. மாடுகளை போற்றிம் மகிழ்விக்க ஏற்படுத்திய விழா மாட்டுப் பொங்கல் .

C. மாடுகளை போற்றி மகிழ்விக்க ஏற்படுத்தியத் விழா மாட்டு பொங்கல் .

D. மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழா மாட்டுப் பொங்கல்.

**5. எடுத்துக்காட்டு எழுதுக [மூன்று மட்டும்]** **3x1=3**

I. **உடன்பாட்டுவினைத் தொடர்.**

A. அவன் கண்டான்
B. அவன் கண்டிலன்
C. அவன் கண்டானா?
D. ஓஓ.அவன் கண்டான் !

II. **கட்டளைத்தொடர்**

A. நாய்களுக்கு அனுமதி உண்டா?
B. இங்கு நாய்களுக்கு அனுமதி உண்டு.
C. நாய்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை
D. நாய்களுக்கு அனுமதி கிடையாது.

III. **செயப்பாட்டுவினைத் தொடர்.**

A. கோவலன் கொலை உண்டான்.
B. கோவலன் கொலை செய்தான்.
C. கோவலன் கொலை செய்திலன்
D. கோவலன் கொலை செய்யப்பட்டான்.

IV. **உணர்ச்சித் தொடர்.**

A. பரிமலா வருந்திலள்.
B. அந்தோ .பரிமலா வருந்தினாள் !
C. பரிமலா வருந்துவாள்.
D. பரிமலா வருந்தினாளா?

V. **கலவை வாக்கியம்**

A. நிலவன் நல்லவன்.
B. நிலவன் நன்கு படித்தான்
C. நிலவன் நல்லவனாகவும் நன்கு படிப்பவனாகவும் விளங்குகிறான்.
D. நிலவன் நல்லவன், நன்கும் படிப்பவன்.

6. <u>வழுவற்ற தொடரைத் தேர்வு செய்து எழுதுக</u> <u>[மூன்று மட்டும்]</u>

**3x1=3**

I

A. பழங்கள் நன்கு விளைந்தது .

B. பழங்கள் நன்கு விளைந்தனர்.

C. பழங்கள் நன்கு விளைந்தன.

D. பழம் நன்கு விளைந்தன .

II.

A. காட்டில் ஆந்தை கத்த நரி கத்தியது.

B. காட்டில் ஆந்தை அலற நரி ஊளையிட்டது.

C. காட்டில் ஆந்தை குரைக்க நரி ஊளையிட்டது.

D. காட்டில் ஆந்தை கத்த நரி ஊளையிட்டது.

III.

A. நேற்று வந்தவன் இவனல்லன்

B. நேற்று வந்தவன் இவனன்று.

C. நேற்று வந்தவன் இவனல்ல.

D. நேற்று வந்தவன் இவனல்லர்

IV.

A. விடிகால எந்திருச்சி சூரியன பாத்தான்.

B. விடிகாலை எந்திருச்சி சூரியன பாத்தான்.

C. விடிகால எழுந்து சூரியன பாத்தான்.

D. விடியற்காலை எழுந்து சூரியனைப் பார்த்தான்.

V.

A. பனந்தோப்பிற்குச் சென்றால் பதநீர் கிடைக்கும்.

B. பனந்தோட்டத்திற்குச் சென்றால் பதநீர் கிடைக்கும்.

C. பனங்காட்டிற்குச் சென்றால் பதநீர் கிடைக்கும் .

D. பனங்கொள்ளைக்குச் சென்றால் பதநீர் கிடைக்கும்.

## பகுதி -இ (இலக்கியம் -31 மதிப்பெண்)

## Section –C ( Main course book 31 Marks)

7. <u>பின்வரும் செய்யுள் அடிகளைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி</u>: **(5x1=5)**

**“ உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்**
**உறவுகல வாமைவேண்டும்**
**பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை**
**பேசா திருக்கவேண்டும்**
**பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்**
**பிடியா திருக்கவேண்டும்”**

**வினாக்கள்** :

I. இப்பாடலின் ஆசிரியர் யார்?

A) கம்பர் B) வள்ளலார் C) போதனார் D) கபிலர்

II. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

A) தெய்வமணிமாலை B) திருக்குறள்

C) அகநானூறு D) நற்றிணை

III. திருவருட்பா எத்தனைத் திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது?

A) மூன்று B) இரண்டு C) ஐந்து D) ஆறு

IV. இப்பாடல் யாரை முன்னிலைப் படுத்துகிறது?

A). கண்ணன் B) அருகன் C) முருகன் D) ஈசன்

V. யாருடைய உறவு கலவாமை வேண்டும்?

A) உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவார்

B) உள்வைத்திருப்போர் C) கள்வர் D) நாத்திகர்

**8. <u>பின்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளி</u>:** **5×1=5**

பல்வேறு தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களுக்கும் வேராக இருந்து 19ஆம் நூற்றாண்டின் அறிவுப் புரட்சியில் பெரும்பங்காற்றிய சென்னைப் பல்கலைக்கழகம் 1857ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 1914இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட இராணிமேரி கல்லூரி பெண்கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ஆகும். ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் பச்சையப்பன் கல்லூரி. மேலும் மருத்துவக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, உடற்பயிற்சிக் கல்லூரி, கவின்கலைக் கல்லூரி, மாற்றுத் திறனாளிகளுக்கான பள்ளி எனச் சென்னை நகரின் கல்விக் கூடங்கள் பலவும் தமிழ்ச் சமூகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தின. 19ஆம் நூற்றாண்டில், கல்வி வளர்ச்சியின் உடனிகழ்வான அச்சுப்பரவல், நாளிதழ்ப் பெருக்கம் ஆகியவை சென்னையின் அறிவு வளர்ச்சிக்குத் துணை நின்றன. இதுவே, தமிழ்ச்சமூகம் அறிவுத்துறையில் பெரும் பாய்ச்சலை மேற்கொண்ட காலகட்டமாகும்.

**வினாக்கள்** :

I. எந்தப் பல்கலைக்கழகம் பல்வேறு தென்னிந்தியப் பல்கலைக் கழகங்களுக்கும் வேராக இருந்தது ?

II. சென்னையில் 1914இல் பெண்களுக்கெனத் தொடக்கப்பட்ட கல்லூரியின் பெயர் ?

III. ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம் எது ?

IV. 19ஆம் நூற்றாண்டில் சென்னையின் அறிவுவளர்ச்சிக்குத் துணை நின்றவை எவை ?

V. தமிழ்ச் சமுகத்தில் பெரும் அசைவுகளை ஏற்படுத்தியவை எவை?

**9. <u>பின்வரும் செய்யுள் வினாக்களில் எவையேனும் இரண்டனுக்குச் சுருக்கமான விடையளி</u>** **[ 2×3=6]**

I. இராமன் சடாயுக்குச் செய்த இறுதிச் சடங்கு பற்றி எழுதுக.

II. பிறகொருநாள் கோடை உணர்த்தும் செய்திகள் யாவை?

III. **செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**‘ **செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்**’ தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

IV. அகநானூறு பாடலில் தலைமகன் பாங்கற்கு உரைத்த செய்திகள் யாவை ?

**10. <u>பின்வரும் உரைநடை வினாக்களில் எவையேனும் மூன்றனுக்கு விடையளி.</u>** **3×5=15**

I. தமிழ்மொழியின் நடையியல் குறித்த கருத்துகளை சான்றுடன் விளக்குக.

II. புயலுக்கான யெர்கள், மழையைக் கணிக்கும் அறிகுறிகள் குறித்து எழுதுக

III. தமிழர் குடும்ப முறையில் மணந்தகம் குறித்த கருத்துகளை எழுதுக.

IV. பேரிடர் மேலாண்மை- விளக்குக.

V. சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

## பகுதி -ஈ (துணைப்பாடம் -12 மதிப்பெண்)
## Section – D ( Non-detail - 12 Marks)

11. **ஏதேனும் ஒன்று குறித்து துணைப்பாடக் கட்டுரை எழுதுக** **1x7=7**

I. முதற்கல் II. தலைக்குளம் III. தம்பி நெல்லையப்பருக்கு

**12. கீழ்காணும் கதைமாந்தரில் ஒருவரின் பண்பு நலனை எழுதுக** **1×5=5**

I. அல்லி II. மூக்கம்மாள்

## பகுதி -உ( படைப்புத்திறன் -15 மதிப்பெண்)
## Section – E ( Creative writing - 15 Marks)

**13. பின்வரும் தலைப்புகளில் ஒன்று பற்றிக் கடிதம் வரைக.** **1×6=6**

I. காற்று மாசு அடைவது குறித்து மாசு கட்டுப்பாட்டு அலுவலர்க்குக் கடிதம் ஒன்று எழுதுக

**(அல்லது)**

நீ சென்று வந்த கல்விச்சுற்றுலா குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் .

( உனது முகவரி: **இரா.அமிழ்தினியான்/அமிழ்தினியாள்**
**17,மேலக்காவேரி கும்பகோணம், 612001** )

14. கிராமிய விருது பெற்ற நாட்டுப்புறக்கலைஞரை **நேர்காணல்** செய்க.

**1×3=3**

**15. பின்வரும் தலைப்புகளில் ஒன்று குறித்துக் கட்டுரை எழுதுக.**

**1x6=6**

I. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
II. சிக்கன வாழ்வு
III. மருத்துவத்துறையில் இந்தியா

---